https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-2 April 2025

Published on 14, April-2025 ISSN: 3049-2688 (Online)

# கவிஞர் மனுஷ்ய புத்திரன் கவிதைகளில் தனிமனித உணர்வுகள்

**திரு. இரா. ஆதிகேசவன்**
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்)
இணைவு: திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர் - 632 115

**முனைவர் பெ. தேவி**
நெறியாளர், இணைப் பேராசிரியர்
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
அறிஞர் அண்ணா அரசுக் கலைக்கல்லூரி
செய்யாறு – 604 407. திருவண்ணாமலை மாவட்டம்

## ஆய்வுச் சுருக்கம்

*கவிஞர் மனுஷ்ய புத்திரன் கவிதைகளில் காணலாகும் தனிமனித உணர்வுகள் சார்ந்த கவிதைகளைக் கொண்டு அவரின் வாழ்வியல் செயற்பாடுகளை எடுத்துரைக்கும் நோக்கில் இக்கட்டுரை அமையப் பெறுகிறது. கவிதைகள் வெறும் உணர்வு வெளிப்பாடாக இல்லாமல் அது வரலாற்று ஆவணப் பதிவாக எப்படி மாறிப்போகின்றது என்பதையும் இக்கட்டுரை கவனப்படுத்துகிறது.*

## திறவுச் சொற்கள்

*கவிஞர் மனுஷ்ய புத்திரன், மனிதம், தனிமனித உணர்வுகள், தனிமை, படைப்பு, கவிதை.*

## முன்னுரை

*தமிழில் எழுதப்படும் நவீனக் கவிதைகள் என்பவை தன்னிலை விளக்கமாகவும் அழகியல், கற்பனை சார்ந்த ஒன்றாகவும் அமைகிறது. அவ்வாறு எழுதப்பட்டுள்ள கவிதைகள் காலத்தின் கண்ணாடியாகவும் பிரதிபலிக்கின்றன. அவற்றுள் கவிஞர் மனுஷ்ய புத்திரனின் கவிதைகள் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகின்றன. அவரின் தனிமனித உணர்வுநிலை சார்ந்த கவிதைகள் வழி தமிழ்ச் சமூகத்தின் வரலாற்று ஆவணமாகத் திகழும் ஓர்மையும் இக்கட்டுரை முன் வைக்க முனைகிறது.*

## மனிதம் – வரையறை

*மனிதம் என்பது எதுவென்று உரைக்கையில், பிறருக்காகத் துன்பப்படும் ஏங்கும் ஆற்றாமையை வெளிப்படுத்தும் தன்மையே மனிதம் எனலாம். அறிஞர்கள் பலரும் பல்வேறு வகைகளில் அவற்றினை வகைப்படுத்துகின்றனர். அந்தவரிசையில், மனிதம் என்னும் பெயர்ச்சொல்லுக்கு* ***"மனிதர்கள், அவர்களின் நலன்கள், விழுமியங்கள், கண்ணியம் முதலியவற்றுக்கு முதன்மை தருதலே"***[1] *என்று தமிழ் விக்சனரி விளக்கம் தருகிறது. இதனை, மனிதநேயம் என்று அழைப்பர்.*

## இன்றைய சூழலில் மனிதர்கள்

*இன்றைய சமகால மனிதர்கள் தகவல் தொழில்நுட்பம் சார்ந்து இயங்குவதால் அவர்களிடம் மனிதம் என்பது சற்று மாறுபட்டுள்ளது என்று புரிந்துகொள்ளலாம். காலத்திற்கும் சூழலுக்கும் ஏற்ப மனிதர்களின் மனநிலை மாறுபடுகிறது. அதிலும் செல்போன் யுகத்தில்*

*இதன் மாறுபாட்டு எண்ணிக்கை அதிகம். அதனால், வளர்ச்சி வேகத்தினூடாக, மனிதத் தன்மையை இழந்து வருகிறோம். ஆனால், அங்கொன்றும் இங்கொன்றுமாக மனிதம் துளிர்த்துக்கொண்டுதான் இருக்கின்றது.*

### தனிமனித உணர்வுகள்

*ஒவ்வொரு மனிதருக்கும் எண்ணவோட்டங்கள் என்பவை மாறுபட்டு காணப்படும். அதாவது, சூழ்நிலைக்கேற்றார் போல் அவை அமையும். காலமும் சூழலும் வாழிடம் சார்ந்தும் அவற்றின் தேவைகள் தீர்மானிக்கப் படுகிறது. ஆனால், இயல்பான உணர்வுகள் கூட வாழ்வியல் பிரச்சனைகளால் மட்டுப் படுத்தப்படுகிறது. கோபம், அழுகை, வெட்கம் போன்றவை. அப்படியான தனிமனித உணர்வுகள் காதல், காமம் என்ற இருவேறு நிலைகளிலும் அமைகிறது.*

*இயல்பு மனிதர்களைவிட மாற்றுத் திறனாளிகள், மூன்றாம் பாலினம் சார்ந்தவர்களின் உணர்வுநிலைகள் என்பவை வேறுபட்டவை. அவர்களின் அன்றாட வாழ்வியலில் யாரோ ஒருவரைச் சார்ந்தும் அல்லது அவர்களுடனோ இணைந்து வாழ வேண்டிய நிர்பந்தம் ஏற்படுகிறது. இந்நிலையில் அது சார்ந்த உணர்வுகளை கலையாக்குவது குறிப்பாக, கவிதையாக்குவது என்பது உணர்வினை நேரடியாகக் கடத்தும் நிலையாகும். இப் போக்கில், கவிஞர் மனுஷ்யபுத்திரன் கவிதைகள் அமைகின்றன. அவற்றைப் பின்வருமாறு காணலாம்.*

### மனுஷ்ய புத்திரன் கவிதைகள் கட்டமைக்கும் தனி மனித உணர்வுகள்

*மனுஷ்ய புத்திரன் தம் கவிதகளில் கோபம், கண்ணீர், தனிமை, விபத்து, வீடு, இரவு – பகல், சக்கர நாற்காலி, காதலிகள், மரண வீடுகள், தற்கொலை. காமம் சார் உணர்வுகள், மதுப் பழக்கம், ஆசை, மகிழ்ச்சி, ஏக்கம், இணையவெளி, சமூக வலைதள நண்பர்கள், நோயாளிகள் என வாழ்தலுக் குரிய அனைத்து விடயங்களையும் கட்டமைத்துள்ளார். அவற்றுள் சிலவே இங்கு விவாதிக்கப்படுகிறது.*

### தன் வரலாற்றுப் போக்குக் கவிதைகள்

*தன்னுடைய உடல் ஊனத்தை ஒரு பக்கம் வலிமையாகவும் மற்றொரு பக்கம் பலமிழந்த ஒருவராகவும் காட்டிக் கொள்ளும் போக்கு மாறுபட்ட சிந்தனையைத் தோற்றுவிக்கக் காரணமாக அமைந்துள்ளது.*

*தனிமை என்பதினை எடுத்துரைக்கும் கவிஞர் தன் வாழ்நிலையிலிருந்து அவற்றைக் கட்டமைக்க முயல்கிறார். வீடு என்பது பன்முகத் தன்மைக் கொண்டதாக அமையும் சூழலில் அவற்றில் அனைத்தினையும் பார்க்க முடியும். ஆனால், வீட்டில் அல்லது தனித்த அறையில் யாருமின்றி வசிக்கும் சூழலில் ஒரு நாள் ஏற்பட்டாலே வெறுமை சூழ்ந்து கொள்ளும். ஆனால், தொடர்ந்து அவ்வாறே வாழ வேண்டிய நிலை என்பது தொடரும் சமயத்தில் தனக்கான வாழ்க்கை எப்படியானதாக அமையும் என்பதினைப் பின்வரும் அவரின் எழுத்துக்களிலிருந்து நாம் புரிந்து கொள்ளலாம்.*

***“நான் வீட்டில் வசிக்கவில்லை***
***ஓர் அறையிலேயே வசிக்கிறேன்.***
***நான் வீட்டை மாற்றுகிறேன்***
***என் அறையை மாற்ற முடியும்***
***என்று தோன்றவில்லை.”***[2]

*இந்தப் பதிவுகள் வெறும் வீடு என்பதாக மட்டுமில்லை. அவரின் வாழ்க்கை தனிமை என்னும் இரும்பு பின்னல்களாலான வலைகளை மையப்படுத்தியதாக உள்ளது.*

*ஒவ்வொரு முறை வீடு மாறும்போது தனக் கான அறை என்பது யாருமற்ற தனிமை யோடு தான் அறை அப்படியே இருக்கிறது. அதனைத் தான் நான் வீட்டில் வசிக்க வில்லை என்றும் அறையிலேயே வசிக்கிறேன் என்றும் கூறுகிறார். வீட்டினை மாற்றும் அவரால் அறையினை மாற்ற முடியவில்லை என்ற ஏக்கத்தை இக்கவிதையின் வழி வெளிப்படுத்துகிறார். வீடு என்பது அனைவருக்கும் உரிய ஒன்றான சூழலில் அறை தனி நபருக்குரியதாக மாறிப் போகும். இதனை அனைவரும் என்றாவது ஒரு சூழலில் உணர்ந்திருப்போம் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.*

*தனிமையை வேறு விதமாகவும் உருவகப் படுத்துகிறார் கவிஞர். அதாவது, நீங்கள் என்னை அழைக்கும் பொழுதுகளில் உங்களுடன் பேச முடியாத நிலை உருவாகினால், அப்பொழுது என் தனிமையுடம் பேசிக் கொண்டிருக்கிறேன் என்று பொருள்பட கீழ்க்காணும் கவிதையைப் பதிவாக்குகிறார்.*

***“உன் தொலைபேசி அழைப்பை***
***இப்போது ஏற்கமுடியாது***
***ஏனெனில்***
***சுவர்களுடன்***
***நான் பேசிக்கொண்டிருக்கிறேன்.”***[3]

*யாருமற்ற வீட்டில் வசிப்பது கொடுமையானது. அந்தச் சூழலைப் பழக்கிக்*

கொண்டவர்கள் யாருமில்லை என்ற உணர்வினைத் தவிர்த்து அங்கிருக்கும் பொருட்களுடன் பேசிக் கொள்வது என்பது உண்மையானதாக உள்ளது. உயிருடன் இருக்கும் பூனை, நாய் உள்ளிட்ட வீட்டு விலங்கினங்களுடன் ஓர்மை உணர்வுடன் இருப்பது போன்றே உயிரற்ற பொருட் களான பொம்மை, சுவர், விளையாட்டு பொருட்கள், ஜன்னல்கள் இன்ன பிறவற்றின் மீதான அன்பும் அப்படியானதே ஆகும். இதனைக் கவிஞர் காட்சியாக்குகிறார். இன்னொரு கவிதையில் 'நிழல்' என்னும் தலைப்பில் படைக்கப்பட்டுள்ளது. அதில் ஒரு இலையாக வாழ்க்கை கழிகிறது என்பதினை,

"ஒவ்வொரு நாளும்

ஒரு இலையைப் போல

நிராதரவாய்

வாடி உதிர்கிறேன்."[4]

இப்படி படிமங்களைக் கொண்டும் தமது தனிமையான வாழ்வினைக் கவிதையாக்கு கிறார். பிறந்த நாள் கொண்டாட்டத்தின் போது நம்முடைய வயது வளையங்கள் கூடிப் போனதை அறியாமல், சிரித்து மகிழ்வு கொள்கிறோம். வயது என்பது மனிதர்களுக்குக் கூடி போகும்போது தனிமை அவர்களைச் சூழ்ந்து கொள்கிறது. அதுவரை நம்முடன் சிரித்துப் பேசிய மனிதர்கள் விட்டு விலகி போய்விடும் அவலமான காலம் உருவாகிவிடுகிறது. அதனை வாழ்வின் நிதர்சனமாக உணர்ந்த கவிஞர் மனுஷ்ய புத்திரன் அவற்றை இவ்வாறு கவிதையாக்குகிறார்.

"ஐம்பது வயதாகிவிட்டது

வாழ்த்துகள் மனுஷ்

வாழ்த்துகள் ஹமீத்

சம்பவங்கள் ஏதுமற்ற

அதிசயங்கள் ஏதுமற்ற

சாதாரண நாளாக இருக்கும்

ஐம்பதாவது பிறந்த நாளில்

உனக்கு நீயே பரிசாக இரு."[5]

தனக்குத் தானே உதவி, 'உனக்கு நீயே ஒளி' என்கிற நிலையில் அவருக்கு அவரே பரிசுப் பொருளாகக் காட்சிப்படுத்துகிறார். யாரும் தனிமை சூழலில் இருக்கும்போது அவர் களின் வாழ்வு என்பது வெறுமை சூழ்ந்த நிலையில் அமைந்துவிடும். அந்த நாட்களில் வரும் இதுபோன்ற நன்நாட்கள் இன்னும் மனபாரத்தைக் கூட்டி விடும். அதனை மறைப்பதற்கும் மறுப்பதற்கும் இப்படியான கவிதைகளே அவருக்குத் துணை புரிகின்றன.

ஒரு மனிதன் தன் சுயத்தை இழந்து பிறிதொருவரின் உதவியை நாடும்போது அது கிடைக்கவில்லை என்றாலோ அல்லது புறக்கணிக்கப்பட்டாலோ மிகவும் துயரத்தி ற்கு உள்ளாவார்கள். அப்படியான ஒரு சூழல் கவிஞரின் உடல் சார்ந்து அவர் பட்ட இன்னல்களை மனித சமூகத்தின் முன் பொதுவெளியில் காட்சிப்படுத்துகிறார்.

"வேலை செய்யாத

லிஃப்ட்டுகள் முன்னால்

சக்கர நாற்காலியுடன்

நான் இப்படி திகைத்து நிற்பது

இந்த வாரத்தில் இது மூன்றம் முறை

அங்கே என் பயணம் முடிகிறது

நல்லவேளை இந்த உலகில்

மயானங்களும் இடுகாடுகளும்

சமவெளிகளில் உருவாக்கப்பட்டிருக்

கின்றன."[6]

மரண தருவாயில் கூட யார் உதவியும் இல்லாமல் நாம் நம் உடலினைப் புதைக்கவோ எரிக்கவோ செய்துவிடலாம். கால் ஊனப்பட்ட ஒருவன் சக்கர நாற்காலி யில் தொடர்ந்து பயணிப்பது பார்ப்பவர் களுக்கு வேண்டுமானால் எளிமையாக, அவர்கள் நல்லபடியாக இருக்கிறார்கள் என்ற எண்ணம் உருவாகலாம். ஆனால், அதோடு பயணிப்பவர்களுக்கு வாழ்க்கையை வாழ முற்படுபவர்களுக்கு மட்டுமே அதன் வலி, வேதனை புரியும். அந்த அடிப்படை யில், மேற்குறிப்பிட்டுள்ள கவிதைப் படைப் பானது அமைகிறது. இப்படியான சிந்தனை மனித உணர்வின் வெளிப்பாடாகக் கவிஞர் பல கவிதைகளை அமைத்திருக்கிறார்.

வாழ்க்கை குறித்த விளக்கங்களைத் தேடி அலையும் ஒருவரது மனநிலை என்பது வண்ணங்களுக்கு அப்பாற்பட்டதாகும். அதாவது, நிறமிழந்த தன்மையை உணர்ந்து தியான நிலை அதுவாகும். "சாம்பல் நிற நம்பிக்கை" என்னும் கவிதையின் வழியாக வாழ்க்கையின் எதார்த்தமான பக்கங்களைச் சுட்டிக் காட்டுகிறார். அக்கவிதை பின் வருமாறு,

"குணமாகாது எனத் தெரிந்தும்

ஆறுதலுக்கு மருந்துகள் தரும்

வைத்தியன்

தீராது எனத் தெரிந்தும்

வேளை தவறாது மருந்துண்ணும்

பிணியாளி

**இல்லை எனத் தெரிந்தும்
இருப்பதாகத் தோன்றும் தெய்வம்
பிரிவின் பாதைகள் அறிந்தும்
நான் பிடிவாதமாக காத்து நிற்கும்
இந்த அந்திக்கு
சாம்பல் வண்ணம்"[7]**

அந்தி மாலைக்கு சாம்பல் வண்ணம் தீட்டும் கவிஞர் வாழ்க்கையில் வண்ணங்களை இழந்து நிற்கிறார் என்ற பொருள்படும் படியாக இக்கவிதையை வடித்துள்ளார். ஒரு தனிமனிதனின் எண்ணங்கள் ஏக்கங்களாக மாறும் நிலையாக இக்கவிதையைக் காணலாம்.

வாழ்வில் வாசிப்பு என்பது ஒருவரைப் பன்படுத்தும் அவை கலங்கலான மனதையும் தெளிவுப்படுத்தும் தன்மை வாய்ந்ததாகும். எழுத்தாளர், வாசகர் என்ற இருவேறு நிலை களையும் தன்னிலையிலிருந்து விளக்கும் கவிஞர் மனுஷ்ய புத்திரன், **"வாசகராக வாழ்வதன் சிரமங்கள்"** என்னென்ன என்பதைப் பட்டியலிடுகின்றார்.

**எங்கள் தெளிந்த நீர் நிலைகளில்
சில சமயம் கூழாங்கல்லாவும்
சில சமயம் பறவையின் நிழலாகவும்
சில சமயம் மூழ்கும் ஒரு உடலாகவும்
உன் கவிதைகள் சலனங்கள்
உருவாக்குகின்றன.
கவிஞனாக இருப்பதைக் காட்டிலும்
வாசகராக இருப்பது துயரமானது"[8]**

கவிஞர்கள், படைப்பாளர்களின் நேர் கோட்டுப் பயணத்தில் வாசகரின் மனநிலை குறித்து உரையாடும் கவிஞர் மனுஷ்ய புத்திரன் தன்னை வாசகனாகவும் நிலை நிறுத்திக் கொண்டு இயங்குகிறார் என்ற உணர்வு சிறப்பிற்குரியதே. இப்படி, பல்வேறு நிலைப்பட்ட வாழ்வியலைத் தன் உணர்வு நிலையில் நின்று கவிதையாகப் படைத்தளிக் கின்றார் கவிஞர் மனுஷ்ய புத்திரன்.

## முடிவுரை

தமிழில் நவீனக் கவிஞர்களின் வரிசையில் கவிஞர் மனுஷ்ய புத்திரன் மிக முக்கியமான ஆளுமையாகத் திகழ்கிறார். அவரது நூல்களும் எழுத்துப் பதிவுகளுமே அதற்குச் சான்று. மனுஷ்ய புத்திரன் தன்னுடைய கவிதைப் படைப்புகளைத் தன்னை சுற்றியே கட்டமைத்துள்ளார். குறிப்பாக, அவரின் தனிமை சார்ந்தும் உடல் இயங்கியல் சார்ந்தும் படைப்புகளை வெளிப்படுத்து கிறார்.

தனிமை, கோபம், இரக்கம், அன்பு, பாசம் போன்ற உணர்வு நிலைப்பட்ட வடிவங்க ளையே படைப்புகளாக்கிக் கொண்டுள்ளார். மனித வாழ்வியல் பெரும்பாலானோர் காணத் தவறிய இடங்களை அணு அணுவாக கவிஞர் படைத்திருக்கிறார். அது அவருக் கானதாக மட்டுமின்றி அனைவருக்கு மானதாக அமைவதே அப்படைப்பின் முதல் வெற்றியாக இருக்கிறது.

மனிதர்களிடையே நிலவும் பல்வேறு குணநலன்களைத் தம் கவிதைகளின் வழியே காட்சிப்படுத்தி அடுத்த தலைமுறையினருக்கு ஆவணமாக்கும் அரிய பணியினைச் செய்துள்ளார். புதிய யுக்திகளின் வழி தனக்கான தனித்த அடையாளத்துடன் தமது படைப்புகளை முன் வைக்கிறார். யாருக்காகவும் எதற்காகவும் சமரசமின்றி, எவ்விதமான முரண்பாடுகளையும் தனக்கே உரிய பாணியில் எதிர்கொள்கிறார்.

நாள், நேரம், நிமிடம் என ஒரு டைரிக் குறிப்புகள் போலவே தனக்கான கவிதை வடிவத்தைக் கட்டமைத்துள்ளார். ஒரு கவிதை எழுதப்படும் நாள், நேரம், நிமிடம் போன்றவை குறிக்கப்பட்டு நூலிலும் அச்சடிக்கபபட்டு வாசகர்களிடையே பரவலாக்கியத்தில் இவரே முதன்மையர் எனலாம்.

## அடிக்குறிப்புகள்

1. தமிழ் விக்சனரி, (இணையதள பக்கம்)
2. கடல் பார்த்த வீட்டில் கடைசி நாள், ப.18.
3. மேலது, ப. 21.
4. மேலது, ப. 39.
5. மேலது, ப. 47.
6. மேலது, பக். 85 - 87.
7. இரவுக்குக் கைகள் இல்லை, ப.80.
8. மேலது, பக்.113 – 114.

## துணைநூற் பட்டியல்

1. கவிஞர் மனுஷ்ய புத்திரன், கடல் பார்த்த வீட்டில் கடைசி நாள், உயிர்மை பதிப்பகம், சென்னை, 2018.
2. கவிஞர் மனுஷ்ய புத்திரன், இரவுக்குக் கைகள் இல்லை, உயிர்மை பதிப்பகம், சென்னை, 2019.
3. தமிழ் விக்சனரி, (இணையதள பக்கம்.)